DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 333/2026
Miscellaneous :
Sessions : PW 5
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | தனலட்சுமி |
| Father Name | வீரன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **07.07.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருவானைக்கோவில் கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன வீரன் என்பவர் எனது அப்பா ஆவார். கடந்த 18.12.2025 ம் தேதி காலை சுமார் 8.00 மணி முதல் 8.30 மணிக்குள் எனது அப்பா பெட்ரோல் வாங்கி வரும்போது அரசு பேருந்தில் இருந்து கீழே விழுந்து அடிப்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவருக்கு பின் தலையில் அடிப்பட்டு சுய நினைவு இன்றி சிகிச்சையில் இருந்தார். பின்னர் 25 ஆம் தேதி எனது அப்பா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அவரின் பிரேதத்தின் மீது போலிசார் நடத்திய பிரேத விசாரணையில் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. போலிசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் படாளம் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். இறந்தவரின் மகள் என்பதால் என் அப்பாவிற்கு இழப்பீடு பெற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 333/2026
Miscellaneous :
Sessions : PW 4
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | மணிவண்ணன் |
| Father / Husband Name | பிச்சபிள்ளை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **07.07.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது நிதிநத்தம் கிராமத்தில் வசித்து ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன வீரன் என்பவர் எனது மாமா ஆவார். கடந்த 18.12.2025 ஆம் தேதி காலை 8.00 மணிக்கு எனது மாமா வீரன் அரசு பேருந்தில் இருந்து கீழே விழுந்ததாக தகவல் சொன்னார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவர் சுயநினைவு இன்றி சிகிச்சையில் இருந்தார். பின்னர் 25 ஆம் தேதி சிகிச்சை பலனின்றி அவர் இறந்துவிட்டார். அவர் பிரேதத்தின் மீது போலிசார் நடத்திய பிரேத விசாரணையில் நான் சாட்சியாக இருந்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்தவர் எனது மாமா என்பதால் அவருக்கு இழப்பீடு பெற வேண்டி கொடுத்த பொய் புகாரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 333/2026
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | கந்தசாமி |
| Father / Husband Name | ஏகாம்பரம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **07.07.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மெய்யூரில் வசித்து மெய்யூர் பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன். கடந்த 18.12.2025 ம் தேதி காலை 8.45 மணிக்கு நானும் ஹரீஷ்வரனும் பெட்ரோல் பங்கில் இருந்தபோது அரசு பேருந்தில் இருந்து ஒரு நபர் தவறி கீழே விழுந்துவிட்டதாக சொன்னார்கள். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 18.12.2025 ஆம் தேதி காலை சுமார் 8.45 மணிக்கு நானும் சாட்சி ஹரீஷ்வரன் என்பவரும் பெட்ரோல் பங்கில் இருந்தபோது எங்கள் பங்கில் பெட்ரோல் வாங்கிக்கொண்டு பிலாப்பூர் பேருந்து நிறுத்தம் அருகே அரசு பேருந்தில் பின் பக்கமாக வீரன் என்பவர் ஏறும்போது ஆஜர் எதிரி அஜாக்கிரதையாக வாகனத்தை எடுக்கும்போது வீரன் என்பவர் தவறி கீழே விழுந்து விபத்து ஏற்படுத்தியதை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. காயம் பட்ட வீரன் என்பவரை நானும் ஹரீஷ்வரன் என்பவரும் 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோமா என்றால் இல்லை. மேற்சொன்ன சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறுவிசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 333/2026
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஹரீஷ்வரன் |
| Father / Husband Name | சங்கர் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **07.07.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கருங்குழியில் வசித்து மெய்யூர் பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன். கடந்த 18.12.2025 ஆம் தேதி காலை சுமார் 9.00 மணிக்கு நானும் கந்தசாமி என்பவரும் மேற்படி பங்கில் இருந்தபோது மெய்யூர் சாலையில் அரசு பேருந்தில் இருந்து ஒரு பெரியவர் தவறி கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது. பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் மேற்படி பெரியவர் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 18.12.2025 ஆம் தேதி காலை சுமார் 8.45 மணிக்கு நானும் சாட்சி கந்தசாமி என்பவரும் பெட்ரோல் பங்கில் இருந்தபோது எங்கள் பங்கில் பெட்ரோல் வாங்கிக்கொண்டு பிலாப்பூர் பேருந்து நிறுத்தம் அருகே அரசு பேருந்தில் பின் பக்கமாக வீரன் என்பவர் ஏறும்போது ஆஜர் எதிரி அஜாக்கிரதையாக வாகனத்தை எடுக்கும்போது வீரன் என்பவர் தவறி கீழே விழுந்து விபத்து ஏற்படுத்தியதை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. காயம் பட்ட வீரன் என்பவரை நானும் கந்தசாமி என்பவரும் 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோமா என்றால் இல்லை. மேற்சொன்ன சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறுவிசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 333/2026
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | மீனா |
| Father / Husband Name | அந்தோனி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **07.07.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருவனைக்கோவிலில் வசித்து பள்ளியில் துப்புரவு தொழிலாளராக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன வீரன் எனது அப்பா ஆவார். கடந்த 18.12.2025 ஆம் தேதி எனது அப்பா எங்கள் ஊரில் இருந்து மெய்யூருக்கு பெட்ரோல் வாங்க பேருந்தில் சென்று வீட்டிற்கு வரும் போது மையூரில் அரசு பேருந்தின் பின் பக்கம் ஏறும் போது ஓட்டுநர் வண்டியை எடுத்ததால் எனது அப்பா கீழே விழுந்து தலையில் அடிப்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது அவருக்கு பின் தலையில் அடிப்பட்டு சிகிச்சையில் இருந்தார். பின்னர் எனது அப்பா ஒரு வாரம் கழித்து சிகிச்சை பலனின்றி எனது அப்பா இறந்துவிட்டார். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் இரண்டு முறை விசாரித்தார்கள். என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையம் மற்றும் மருத்துவமனையில் விசாரித்தார்கள். விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா கால் தவறி பேருந்தில் இருந்து அவரது கவனக்குறைவால் விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. இறந்தவர் எனது தந்தை என்பதால் அவருக்கு இழப்பீடு பெற வேண்டி பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**